| | |
|---|---|
| அனுப்புநர்<br>உறுப்பினர்–செயலர்,<br>சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்,<br>1, காந்தி–இர்வின் சாலை,<br>எழும்பூர், சென்னை – 600 008. | பெறுநர்<br>முதன்மை தலைமை பொறியாளர்<br>பெருநகர சென்னை மாநகராட்சி<br>ரிப்பன் மாளிகை<br>சென்னை – 600 003 |

கடித எண்.: பி3/12868/2015

தேதி:28.09.2017

ஐயா,

பொருள்: செ.பெ.வ.குழுமம் – திட்ட அனுமதி – பழைய நில அளவை எண்.778/1A1A பகுதி, நகர நில அளவை எண்.134/10, பகுதி எண்.11, வார்டு–'இ', கொரட்டூர் கிராமம், மனை எண்.22 மற்றும் 23, செ.பெ.வ.குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்டு ஒப்பளிக்கப்பட்ட மனைப்பிரிவு எண்.23/2004, ஸ்ரீ சிட்டி, செங்குன்றம் சாலை, கள்ளிக்குப்பம், சென்னையில் வாகன நிறுத்து தளம் + நான்கு தளங்களுடன் அலுவலக வணிகக் கட்டிடம் – ஒப்பளிக்கப்பட்டிருப்பது – தொடர்பாக.

பார்வை:
1. சிறப்பு கட்டிடப் பிரிவு எண்.603/2015ல் நாள் 28.7.2015 அன்று கிடைக்கப் பெற்ற திட்ட அனுமதி விண்ணப்பம்.
2. அரசாணை (பல்வகை) எண். 303, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 30.12.2013 (த.நா.அ. அறிக்கை வெளியீடு நாள் 29.01.2014).
3. ஏற்கனவே வளர்ச்சிக் கட்டணம் மற்றும் பிற கட்டணங்கள் கோருதல் குறித்து விண்ணப்பதாரருக்கு அனுப்பிய கடித எண்.B3/879/2012 நாள் 3.7.2012.
4. ஏற்கனவே திட்ட அனுமதி ஒப்பளிக்கப்பட்ட இவ்வலுவலக கடித எண்.பி3/879/2012 நாள் 28.8.2012.
5. அரசாணை (பல்வகை) எண்.85, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 16.5.2017.
6. தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கடித எண்.6188/UD-4(3)/2017-8 நாள் 13.6.2017.
7. வளர்ச்சிக் கட்டணம் மற்றும் பிற கட்டணங்கள் கோருதல் குறித்து விண்ணப்பதாரருக்கு இதே எண் கொண்ட இவ்வலுவலக கடித நாள் 31.8.2017.
8. விண்ணப்பதாரரிடமிருந்து கடிதம் கிடைக்கப் பெற்ற நாள் 15.9.2017.

*******

பழைய நில அளவை எண்.778/1A1A பகுதி, நகர நில அளவை எண்.134/10, பகுதி எண்.11, வார்டு–'இ', கொரட்டூர் கிராமம், மனை எண்.22 மற்றும் 23, செ.பெ.வ.குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்டு ஒப்பளிக்கப்பட்ட மனைப்பிரிவு எண்.23/2004, ஸ்ரீ சிட்டி, செங்குன்றம் சாலை, கள்ளிக்குப்பம், சென்னையில் வாகன நிறுத்து தளம் + நான்கு தளங்களுடன் அலுவலக வணிக உபயோகம் கொண்ட கட்டிடத்தை கட்டுவதற்கு, பார்வை 1ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம், பார்வை–7ல் கண்டுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்பளிக்கப்படுகிறது.

2. (i) விண்ணப்பதாரர் பார்வை –7இல் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை ஒப்புக்கொண்டு, ரசீது எண் B005590 நாள் 15.9.2017–ல் கீழ்கண்ட கட்டணங்களைச் செலுத்தியுள்ளார்.

| | | |
|---|---|---|
| | ரூ. 13,650/– | இரசீது எண் B 005590 நாள் 15.9.2017 |
| வளர்ச்சிக் கட்டணம் | ரூ. 1,150/– | |
| கூர்ந்தாய்வுக் கட்டணம் | இல்லை | |
| வரன்முறைக் கட்டணம் | இல்லை | |
| திறந்தவெளிக் கட்டணம் | ரூ. 2,12,000/– | |
| கட்டிடத்திற்கான காப்புறுதிக் கட்டணம் | ரூ. 16,000/– | |
| கழிவுநீர்த் தொட்டிக்கான காப்புறுதிக் கட்டணம் | இல்லை | |
| அறிவிப்புப் பலகைக்கான வைப்புநிதி | ரூ. 9,220/– | |
| உள்கட்டமைப்பு வசதி கட்டணம் | ரூ. 2,52,020/– | |
| மொத்தம் | | |

NOTARY CHENNAI TAMIL NADU R. S... INDIA

R. S...

2. (ii) ஏற்கனவே பார்வை –4ன் வழி வழங்கப்பட்ட திட்ட அனுமதியின் போது கீழ்கண்ட கட்டணங்கள் விண்ணப்பதாரரிடமிருந்து வசூலிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| வளர்ச்சிக் கட்டணம் | ரூ. 20,000/– | ரசீது எண் 01937 நாள் 19.7.2012 |
| கூர்ந்தாய்வுக் கட்டணம் | ரூ. 2,000/– | |
| வரன்முறைக் கட்டணம் | ரூ. 52,000/– | |
| கட்டிடத்திற்கான காப்புறுதிக் கட்டணம்: | ரூ. 72,000/– | ரசீது எண் 000179 நாள் 19.7.2012 |
| கழிவுநீர்த் தொட்டிக்கான காப்புறுதிக் கட்டணம் | ரூ. 4,000/– | |
| அறிவிப்புப் பலகைக்கான வைப்புநிதி | ரூ. 10,000/– | |
| உள்கட்டமைப்பு வசதி கட்டணம் | ரூ. 3,59,000/– | ரசீது எண் 01938 நாள் 19.7.2012 |

மேற்கூரிய கட்டணங்கள் அனைத்தும் தற்போதைய திருத்திய திட்ட அனுமதி கட்டணத்தில் சரிசெய்யப்பட்டு மீதிதொகை வசூலிக்கப்பட்டது.

இந்த திட்ட அனுமதியானது பார்வை–4ன் வழி வழங்கப்பட்ட திட்ட அனுமதிக்கான திருத்திய திட்ட அனுமதியாகும். எனவே, பார்வை–4ன் வழி வழங்கப்பட்ட திட்ட அனுமதி இதனால் ரத்து செய்யப்படுகிறது.

3. உத்தேச திட்டத்திற்குக் கட்டிட அனுமதி வழங்குவதற்கு முன்னால், குடிநீர் வசதிஞக்கான வடிவமைப்புகளை உறுதி செய்து கொள்ளுமாறு உள்ளாட்சி அமைப்பு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4. மேல்நோக்கு வடிகட்டு கழிவு நீர்த்தொட்டியின் பராமரிப்பை முதலில் கட்டிட முனைவோரே மேற்கொள்ள வேண்டும். குடியிருப்போர் சங்கம் உருவாக்கப்பட்ட பின் அதனிடம் பொறுப்பை ஒப்படைக்கும் வரையில் கட்டிட முனைவோரே அதைப் பராமரிக்க வேண்டும்.

5. அனுமதியளிக்கப்பட்ட வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மழை நீர் சேகரிப்பு நடவடிக்கைகள் குழுமத்திற்கு திருப்தி அளிக்கும் வகையில் அமையாதிருப்பதும், ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்திற்கு மீறியதாகவும் வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளுக்கு முரணானதாகவும் கருதப்பட்டு அதன்மீது அமலாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

6. கிணறுகள், மேல்நிலைத் தொட்டிகள் மற்றும் கழிவு நீர்த்தொட்டிகள், சுகாதாரமுறையில் உறுதியாக மூடப்பட்டு கொசுத் தொல்லைகள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

7. என் பி/சிறப்புக் கட்டிடம்/262/2017 நாள் 25.9.2017 என எண்ணிடப்பட்ட இரு ஒப்பளிக்கப்பட்ட வரைபடங்கள் இத்துடன் அனுப்பப்படுகின்றன. இத்திட்ட அனுமதி 25.9.2017 இருந்து 24.9.2022 வரை செல்லுபடியாகும்.

8. இந்த ஒப்பளிப்பு இறுதியானது அல்ல. உள்ளாட்சி அமைப்புச் சட்டத்தின் கீழ் கட்டிட அனுமதி பெறுவதற்கு, விண்ணப்பதாரர் பெருநகர சென்னை மாநகராட்சியை அணுக வேண்டும். கட்டிட அனுமதி பெற்ற பிறகு தான் கட்டிடத்தைக் கட்டத் தொடங்கலாம்.

9. நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971ன் வகைப்பாட்டிற்கு ஏற்ப கட்டிடங்களுக்கு திட்ட அனுமதி வழங்கப்படுகிறது. அதில் கட்டமைப்பு உறுதிப்பாடு மற்றும் கட்டுமானத்தின்போது பாதுகாப்பு போன்றவை இடம் பெறவில்லை. எனினும் இந்த வகையான அம்சங்கள் உள்ளாட்சித் துறை விதிகளில் உள்ளது.

கட்டிடத்தின் கட்டமைப்பு உறுதிபாட்டை பொறுத்தவரை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி சட்டம் 1920ல் கட்டிட விதியில் கூறியுள்ளது போல் அதாவது பெருநகர சென்னை நகர மாநகராட்சி சட்டம் 1919, தமிழ்நாடு மாவட்ட நகராட்சி விதிகள், தமிழ்நாடு ஊராட்சி விதிகள், இது உள்ளாட்சிதுறை அதிகாரத்தின் கீழ் வருகிறது. தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971 மூலம்

NOTARY CHENNAI TAMILNADU R SRIDHARAN ADVOCATE CHENNAI CITY GOVERNMENT OF INDIA
Advocate
Central Gov

(59)

வழங்கப்படும் திட்ட அனுமதியில் கட்டமைப்பு உறுதிப்பாடு இடம் பெறவில்லை. இருப்பினும், கட்டிடத்தின் தொடர் கட்டமைப்பு உறுதிப்பாடு மற்றும் கட்டுமானத்தின் போது பாதுகாப்பு போன்றவைகள் விண்ணப்பதாரர் / அபிவிருத்தியாளர் / பொது அதிகார நபர் மற்றும் வரைபடத்தில் கையொப்பமிட்டுள்ள கட்டமைப்பு பொறியாளர் / உரிமம் பெற்ற நில அளவையர் / கட்டிட வடிவமைப்பாளர் அவர்களின் பொறுப்பாகும்.

10. செ.பெ.வ.குழுமம் சட்டபூர்வமாக திட்ட அனுமதி அளிப்பதன்மூலம் விண்ணப்பதாரரின் பேரில் நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு, விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையத்தில் குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

- சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன்மேல் வேறு யாரும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய செ.பெ.வ. குழுமம் பொருத்தமான அமைப்பு அல்ல.

11. கட்டிடம் கட்டப்படுவதைக் கண்காணிக்குமாறும், அது ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தின்படியே கட்டப்படுகிறது என்பதை உறுதி செய்து கொள்ளும்படியும், அவ்வாறில்லாமல், ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டப்பட்டால் உடனுக்குடனேயே அமலாக்க நடவடிக்கை எடுக்குமாறும் உள்ளாட்சி அமைப்பு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

12. விண்ணப்பதாரர் தமிழ்நாடு கட்டிட மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமத்திடம் ஒப்புதல் பெற்று அதற்குரிய பதிவு எண்ணை விண்ணப்பதாரர் கட்டிட முழுமை சான்றிதழ் விண்ணப்பம் விண்ணப்பிக்கும் போது சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு திட்ட அனுமதி ஒப்பளிக்கப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

உறுப்பினர்–செயலருக்காக.

இணைப்பு:
1. ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தின் 2 படிகள்.
2. திட்ட அனுமதியின் 2 படிகள்.

நகல்:
1. திரு வி.ஜி.வெங்கடேசன்
   எண்.1, பிள்ளையார் கோயில் தெரு
   கள்ளிக்குப்பம், அம்பத்தூர், சென்னை– 600 053
2. உறுப்பினர்
   உரியதுறை (Appropriate Authority)
   108, உத்தமர் காந்தி சாலை,
   நுங்கம்பாக்கம், சென்னை – 600 034
3. வருமானவரி ஆணையர்
   168, உத்தமர் காந்தி சாலை,
   நுங்கம்பாக்கம், சென்னை – 600 034
4. துணைதிட்ட அமைப்பாளர்
   செயலாக்கப்பிரிவு (வடக்கு),
   செ.பெ.வ.குழுமம், சென்னை– 600 008

NOTARY
CHENNAI, TAMILNADU
R. SRIDHARAN
ADVOCATE
CHENNAI CITY
GOVERNMENT OF INDIA

R. SRIDHARAN

## Chennai Metropolitan Development Authority
## PLANNING PERMIT
(Sec 49 of T & C. P. Act 1971)

PERMIT No. 11607

B/Spl.Bldg/262/2017

Date of Permit 25.9.2017

File No. B3/12866/15

Name of Applicant with Address THIRU. V.G. VENKATESAN, No. 1, Pillaiyar koil Street, Kallikuppam. Anbattur. Ch.53.

Date of Application 28.7.2015

Nature of Development : ~~Layout/Sub-division of Land/~~Building construction/~~Change in use of Land~~/Building

Site Address Stilt + 4 floors office Building at Plot no 22 & 23 in CMDA Appd. Layout No. 23/2004 in Sri City, Redhills Rd, Kallikuppam, Chennai. in Old S.No. 778/1A1A (Part),

Division No. T.S.No 134/10, Block no. 11, Ward. E of Korattur, village.

Development Charge paid Rs. 13,650 Challan No. B 005590 Date 15.9.17
20,000/ Rtno. 01937 19/7/12

PERMISSION is granted to the ~~layout/sub division of land/~~building construction~~/change in use of land~~/building according to the authorised copy of the plan attached hereto and subject to the condition overleaf.

3. The permit expires on 24.09.2022 the building construction work should be completed as per plan before the expiry date. If it is not possible to Complete the construction, request for renewing the planning permit should be submitted to Chennai Metropolitan Development Authority before the expiry date. If it is not renewed before the said date fresh. Planning Permission application/has to be submitted for continuing the construction work when the Development Control Rules that may be currently in force at that time will be applicable. If the construction already put up is in deviation to the approved plan and in violation of rules. Planning permit will not be renewed.

25/9/2017

For MEMBER SECRETARY

23/09/17

T.G.JAYAKUMAR.B.A.,B.L.,
Enrolled as an Advocate
Vide No: 897 of 1980 dt 17-12-1980
At The Bar Council of Tamil Nadu

T.G. JAYAKUMAR, Notary
G.O.MS. No. 158
Law Dept
27.05.97
GOVT. OF TAMIL NADU

Greater Chennai Corporation

நகரமைப்பு பிரிவு - பணித்துறை

Town Planning Section-Works Department

73

## Building Permission

(1919 ஆம் ஆண்டின் சென்னை மாநகராட்சி சட்டம் 238 வது பிரிவின் படி)

(1919 MCMC Act Section 238)

| கட்டட அனுமதி எண்/ Building Plan No | | திட்ட அனுமதி எண்/Plan Submission No | |
|---|---|---|---|
| CEBA/WDCN07/00006/2018 | | B3/12866/2015 - 25/09/2017 | |
| மண்டலம் / Zone | கோட்டம் / Ward | அனுமதி நாள் / Approval Date | மனுபெறப்பட்ட நாள்/ Application Date |
| N07 | N082 | 05/01/2018 | 05/01/2018 |
| மனுதாரரின் பெயர் மற்றும் குடியிருப்பு முகவரி / Applicant name & address | | V.G. VENKATESAN-NO.1, PILLAIYAR KOIL STREET, KALLIKUPPAM, AMBATTUR, CHENNAI-600053. | |
| சேவைப்பட்டு தன்மை / Service Type | | CMDA Proposal- only for Building Permit | |
| மனை அமைவிடம் / Plot address | | Block No:11, WARD - E,Plot No:22 & 23, Survey No:T.S.NO.134/10, KORATTUR VILLAGE, SRI CITY, REDHILLS ROAD, KALLIKUPPAM, AMBATTUR, CHENNAI, 600053 | |
| Building License Fees | | 135400 | |
| Road cut charges - CMWSSB SEWERAGE | | 14400 | |
| Road cut charges - CMWSSB, WATER | | 14300 | |
| Road cut charges - TNEB | | 14300 | |
| Scrutiny Fees | | 600 | |
| Tentative improvement charges | | 677000 | |
| மொத்தக் கட்டணம்/ Total (In Rs.) | | 856000 | |

Amount (in words): Rupees Eight Lakh Fifty Six Thousands Only

M.W.G.W.F. DD Details : DD Number: 192127 Amount: 177000 Rs. Date:22/12/2017 Bank:BANK OF BARODA

பின் குறிப்பிட்ட நிபந்தனைகளுடன் அனுமதிக்கு ஒப்பளிக்கப்பட்ட வரைபட நகலின்படி அனுமதி

Sanctioned for CMDA Proposal- only for Building Permit Subject to Terms and Condition on Rear Side and as per Sanctioned plan copy.

இந்த அனுமதி 04/07/2018 ஆம் தேதிக்குள் வேலை தொடங்காவிட்டால் காலாவதியாகிவிடும் தொடங்கப்பட்டிருந்தால் கட்டிட அனுமதி

முடிவு நாள் 04/01/2020

This Sanction will expire if the construction is not started with in 04/07/2018

If Construction started Building Permit is valid up to 04/01/2020

05/01/18

Assistant Executive Engineer (T.P.)

3/1/18

Executive Engineer (T.P.)

3/1/18

T.G. JAYAKUMAR, Notary ★ G.O.MS. No.158 Law Dept 27.06.97 ★ GOVT. OF TAMIL NADU

T.G.JAYAKUMAR, B.A., B.L.,
Enrolled as an Advocate
Vide No: 897 of 1980 dt 17-12-1980
At The Bar Council of Tamil Nadu